**தலைப்பு 215 – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

---

தலைப்பு 215 – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்பு**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத்தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும்/ அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச்சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.9 |
| | | 2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பாடமை. | 2.13 |
| | | 3. எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்படாமை | 2.2.1 |
| | | 4. அமுல்ப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான குறைபாடுகள் | 2.3 |
| | | 5. பொதுமக்களிற்கான சேவைகளை நிறைவேற்றுவதிலுள்ள குறைபாடுகள் | 2.8 |
| | | 6. மனித வளங்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.15 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான | 1. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாகவும் சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதென்பதுவும். | | |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களை தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதென்பதுவும். | 1. இணங்காமைகள்<br>2. காலங்கடந்த வைப்புக்கள் | 2.14<br>2.11 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | 1. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிலுள்ள குறைபாடுகள்<br>2. வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.10<br>2.12 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் | 1. வருடாந்த பொருள் மெய்மையாய்விலுள்ள குறைபாடுகள்<br>2. விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்<br>3. பாதுகாப்பற்ற ஆதனங்கள்<br>4. வெளித் தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்ட சொத்துக்கள்<br>5. முறையற்றவாறு கையளிக்கப்பட்ட சொத்துக்கள் | 2.5(அ)<br>2.5(ஆ)<br>2.5(இ)<br>2.5(ஈ)<br>2.5(உ) |

| | | | |
|---|---|---|---|
| | அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | 6. வாகனப் பயன்பாடு | 2.5(ஊ) |
| | | 7. அரசாங்க இல்ல நிர்வாகம் | 2.5(எ) |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் குறித்த திகதிகளில் ஆரம்பிக்கப்படாமை | 2.3 (ஐ) |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமென்பதும் | நட்டங்களும் சேதங்களும் | 2.7 |

## 2 பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்

(i) தொழில்நுட்பக் கல்வி மற்றும் அது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணுதல், தயாரித்தல், செயற்படுத்துவதற்கான அடிப்படையை கண்டறிதல், மேற்பார்வை செய்தல் மற்றும் தொடர்புபடுத்துதல்.

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியை மிகவும் ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்குத் தேவையான மனித வளங்களை முகாமை செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

(iii) தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்வித் துறைகளிற்குரிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதை மேம்படுத்துதல் மற்றும் புத்தாக்கங்களிற்குத் தேவையான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்.

(iv) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி முறைமையினுள் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமைக் கட்டமைப்பின் பிரகாரம் பாடநெறிகளை அமுல்ப்படுத்துதல்

(v) தொழில்சார் வழிகாட்டி மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்திக்காக அரச மற்றும் தனியார் துறையுடன் இணைந்து செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அமுல்ப்படுத்துதல்.

## 2.2 செயலாற்றல்

### 2.2.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் ஆற்றப்பட வேண்டிய 05 பிரதான தொழிற்பாடுகள் காணப்பட்டதுடன் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக 09 தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் 30 தொழில்நுட்பக் கல்லூரிகளிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அவற்றின் செயலாற்றல் பின்வருமாறு உள்ளன.

#### (அ) தொழிநுட்ப/ தொழிநுட்பவியல் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தல் மற்றும் பாடநெறிகளை நடாத்துதல்

மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 39 தொழிநுட்ப/ தொழிநுட்பவியல் கல்லூரிகளில் 125 பாடநெறிகளை நடாத்துவதற்காகவும் அதற்காக 27,000 மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2016 ஒக்தோபர் 14 மற்றும் 2016 திசம்பர் 22 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் சிங்களம், தமிழ், ஆங்கிலம், யப்பான் மற்றும் கொரியன் மொழிகள் மூலமான 102 பாடநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் 119 பாடநெறிகளுக்காக 33,650 மாணவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். இந்த ஆட்சேர்ப்பு முன்னைய ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 26,591 மாணவர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 7,059 மாணவர்களின் அதிகரிப்பு பெற்றுக்கொள்ளப்பபட்டிருந்தது. அதே போல் சேர்த்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட மாணவர் எண்ணிக்கையை உள்ளபடியான ஆட்சேர்ப்புடன் ஒப்பிடும் போது திணைக்களம் செயன்முன்னேற்றம் ஒன்றை பெற்றுக்கொண்டிருந்தது. எவ்வாறாயினும் மொத்த பாடநெறிகளின் எண்ணிக்கையில் 21 பாடநெறிகளிற்காக 4,210 மாணவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1,538 ஆக காணப்பட்டதனால் அப் பாடநெறிகளிற்கான மாணவர்களின் ஆட்சேர்ப்பு 50 சதவீத திட்டமிடப்பட்ட எண்ணிக்கையை விடக் குறைவான மட்டத்தில் இருந்தமையை சுட்டிக்காட்டுகின்றது.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத Advancing Career Skills, Building Career Skills, Developing Career Skills, CEB electrical Course உள்ளடங்கலாக 25 பாடநெறிகள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்தன. அதற்காக 8,830 மாணவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர் அல்லது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 26 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்கு இடையே கூடுதலான மாணவர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்ட பாடநெறிகளும் காணப்பட்டன.

(iii) 3,405 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட கட்டிடம் கட்டுதல் தொடர்பான தேசிய சான்றிதழ், மோட்டார் சைக்கிள் மற்றும்

ஸ்கூட்டர் திருத்தம், விற்பனைப் பிரதிநிதி உதவியாளர், களஞ்சிய உதவியாளர் உள்ளடங்கலான 14 பாடநெறிகள் எந்தவொரு தொழிநுட்ப/ தொழிநுட்பவியல் கல்லூரிகளிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) 2016 நவம்பர் 03 ஆம் திகதிய டிரீசரீ/05/01/02(i)/2016 ஆம் இலக்க திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தொழிநுட்ப/ தொழிநுட்பவியல் கல்லூரிகளில் பாடநெறிகளிற்காக காணப்பட வேண்டிய ஆரம்ப ஆகக்குறைந்த மாணவர் எண்ணிக்கையானது தொழிற்சாலை/ ஆய்வுகூடங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் பாடநெறிகளிற்காக 15 மாணவர்களும் வகுப்பறையை அடிப்படையாகக் கொண்ட பாடநெறிகளிற்காக 30 மாணவர்களும் ஆக உள்ள போதிலும் ஆகக் குறைந்த மாணவர் எண்ணிக்கையின்றி 39 பாடநெறிகள் நாத்தப்பட்டன. மேலும் 2017 சனவரி 31 ஆம் திகதிய டிரீசரீ/05/01/02(II)/2017 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வார இறுதி/ நீண்டகால பாடநெறிகளிற்காக இருக்க வேண்டிய ஆகக் குறைந்த மாணவர் எண்ணிக்கை 30 ஆகக் காணப்பட வேண்டிய போதிலும் 51 பாடநெறிகள் அதைவிடக் குறைவான மாணவர் எண்ணிக்கையுடன் நடாத்தப்பட்டன.

**(ஆ) பாடநெறிகளின் தராதரம்**

------------------------------------------

2013 பெப்ரவரி 26 ஆம் திகதிய 01/2013 ஆம் இலக்க மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொழிற்தகைமை சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து தொழில்சார் பாடநெறிகளும் தராதரம் அளிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 15 இல் உள்ளவாறு 39 தொழிநுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படுகின்ற 871 பாடநெறிகளில் 272 பாடநெறிகள் தராதரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தராதரப்படுத்தப்படாத பாடநெறிகளைப் பின்பற்றிய மாணவர்கள் பாடநெறிகளை பூர்த்தி செய்து கல்லூரிகளிலிருந்து விலகிச் செல்கையில் தேசிய நிலையில் சான்றிதழ் ஒன்றினைப் பெறும் சந்தர்ப்பம் இழக்கப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் செல்லல்**

--------------------------------------------------------------------------------

கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அனுமதிக்கப்பட்ட 28,961 மொத்த மாணவர் எண்ணிக்கையில் (கட்டணம் அறவிடப்படுகின்ற பாடநெறிகளிற்கான மாணவர்கள் தவிர) 7,291 மாணவர்கள் அதாவது 25 சதவீதத்தினர் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கையில் 07 பாடநெறிகளின் மாணவர் விலகிச் செல்லும் சதவீதம் அதற்காக பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 50 சதவீதத்தை விட கூடுதலாக இருந்தன. மேலும் மீளாய்வாண்டின் போது கட்டணம் அறவிடப்பட்ட பகுதிநேர/ மாலை நேர பாடநெறிகளிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட 4,489 மாணவர்களில் 1,774 மாணவர்கள் அல்லது 39 சதவீதத்தினர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர்.

**(ஈ) பரீட்சைப் பெறுபேறுகள்**

----------------------------------------

39 தொழிநுட்ப/ தொழிநுட்பவியல் கல்லூரிகளின் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான தகவல்கள் 2018 நவம்பர் 28 இல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் போது மேற்படி 39 கல்லூரிகளில் சான்றிதழ் பரீட்சைகளிற்காக 16,582 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன் அதில் சித்தியெய்திய மாணவர்களின்

எண்ணிக்கை 10,916 அல்லது 66 சதவீதமாக காணப்பட்டது. இக் கல்லூரிகளில் ஹசலக, கண்டி மற்றும் நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரிகளில் பரீட்சைகளிற்குத் தோற்றிய மாணவர்களில் முறையே 44 மற்றும் 46 சதவீத மாணவர்கள் சித்தியெய்தியிருந்தனர். மேலும் மேற்படி கல்லுரிகளில் என்வீகியூ பாடநெறிகளிற்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளிற்கு 7,510 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன் அதில் 5,199 மாணவர்கள் அல்லது 69 சதவீதத்தினர் தகைமையடைந்திருந்தனர்.

### 2.2.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் அதன் நோக்கெல்லையின் கீழான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான இலக்குக் கட்டங்கள் மற்றும் அத்தகைய இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 2.3 அமுலப்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் கட்டிட நிர்மாணம் மற்றும் நவீனமயப்படுத்தல், உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் கல்விசார் பதவியணியினரினரிற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்காக மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 524.70 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 244.39 மில்லியன் தொகை அல்லது 47 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 27 கட்டிடங்களை மீளமைத்து நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 356 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 167 மில்லியன் தொகை அல்லது 47 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. நிர்மாணங்கள் தொடர்பானவையில் திட்டமிடப்பட்டவாறு 16 நிர்மாண வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 09 கட்டிடங்களின் மீளமைத்தல் வேலைகள் கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரர்களால் விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் அளவை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாதமை காரணமாக அவ் ஒப்பந்ததாரர்களிற்கான கொடுப்பனவுகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 26.85 மில்லியன் மற்றும் ரூபா 67.20 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியில் காணப்பட்ட முறையே மொனராகலை தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டிடக் கட்டம் 1 மற்றும் 2 இன் முன்னேற்றங்கள் மற்றும் வவுனியா தொழில்நுட்பவியல் கல்லூரியின் நிர்மாண வேலைகள் என்பன 2018 ஏப்ரல் 30 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 9.97 மில்லியன் பெறுமதியான மன்னார் தொழில்நுட்பக் கல்லூரியின் விடுதிக் கட்டிட நிர்மாணத்தின் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மேலதிக நிர்மாண வேலைக் கிரயம் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விட விஞ்சியிருந்ததால் விலைப்பட்டியல் கொடுப்பனவுகள் தாமதமாகியிருந்ததுடன் ரூபா 10.04 மில்லியன் தொகையான மருதானை தொழில்நுட்பவியல் தொழிற்பயிற்சி

நிறுவகத்தின் (ரீஜரீபி) கட்டிட மீளமைத்தல் வேலைகளும் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மருதானை தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டிட மீளமைப்பு வேலைகளில் 95 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் வேண்டப்பட்ட நியமங்களிற்கிணங்க நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,147,446 தொகையான செயலாற்றல் பிணை திணைக்களத்தால் அறவீடு செய்யப்பட்டிருந்தது. தற்போது வரை கட்டிடம் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரியின் நிர்மாணத்திற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட போது பிழையாக கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 63,088 தொகை ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்ட உபகரணம் அவ் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருக்காததால் அத்தகைய உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 60 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 41.435 மில்லியன் பெறுமதியான உபகரணம் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 18.565 மில்லியன் மீதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியலாளர் (Mechanist) பாடநெறிக்காக ரூபா 19.89 மில்லியன் (வற் இன்றி) 2017 மார்ச் 16 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த CNC Milling இயந்திரம் அப் பாடநெறிகளை கற்பிப்பதற்காக நிரந்தர போதனாசிரியர் காணப்படாததன் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 30 வரையிலும் விளைவற்றிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 70 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 15.054 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக் ரூபா 54.946 மில்லியன் அல்லது 79 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர்கள் மூலம் மாணவர்களை பயிற்றுவித்து மத்திய கிழக்கு தொழில் சந்தைக்கு இடம்மாற்றுவதற்குத் திட்டமிடுவதற்காக ரூபா 2 மில்லியன் நிதியேற்பாடுகளை வழங்கியிருந்த போதிலும் அப் பணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.4 பெறுகைச் செயன்முறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்**

---

**2.4.1** திணைக்களத்தால் அரசாங்க பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதன் மூலம் பெறப்பட வேண்டியிருந்த வழங்கல்கள் மற்றும் சேவைகளிற்காக ரூபா 323.8 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 249.4 மில்லியன் நிதியேற்பாடுகள் பின்வருமாறு பயன்படுத்தப்பட்டிருந்தன.

| செலவின விடயம் | | செலவின விடயத்தின் விபரம் | மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| | **வழங்கல்கள்** | | | | |
| 1201 | - | காகிதாதி மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | 23.6 | 23.2 | 0.4 |
| 1203 | - | உணவு மற்றும் பானங்கள் மற்றும் சீருடைகள் | 1.0 | 1.0 | 0.0 |
| 1205 | | ஏனையவைகள் | 22.0 | 21.4 | 0.6 |
| | **மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு** | | | | |
| 2102 | - | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 24.0 | 23.0 | 1.0 |
| 2103 | - | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 13.2 | 13.1 | 0.1 |
| 2104 | - | கட்டிட நிர்மாணங்கள் | 240 | 167.6 | 72.4 |
| | | **மொத்தம்** | **323.8** | **249.3** | **74.5** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டமிடப்பட்டவாறு கட்டிடங்கள் தொடர்பான நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக நிதியேற்பாடுகளில் ரூபா 72.4 மில்லியன் தொகை அல்லது 23.4 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரியின் கட்டிட நிர்மாணத்திற்காக ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டம் மூலம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் பெறப்பட்ட ரூபா 70 மில்லியன் தொகையான மேலதிக நிதியேற்பாடுகளிலிருந்து 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 68 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதத்தில் அந் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 65 சதவீத பௌதீக செயன்முன்னேற்றம் மாத்திரமே அடைந்துகொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டில் இதற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ள முடியாதிருந்ததால் மிகுதி வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(இ) தலைமை அலுவலகத்தில் பேணப்படுகின்ற ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டுப் பிரிவை இன்னொரு இடத்தில் ஸ்தாபிப்பதற்காக ரூபா 15 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 13.21 மில்லியன் தொகை அல்லது 88 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. முறையான திட்டமின்றி ஆரம்பிக்கப்பட்டிருந்த அந் நிர்மாணத்தின் ஆரம்ப நடவடிக்கைகளிற்காக ரூபா 566,400 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இவ் வேலையுடன் தொடர்புபடாத ரூபா 1,227,165 தொகை அச் செலவினங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய நிர்மாண வேலை தடைப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கையும் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

### 2.4.2 பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல்

-------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆனமடுவ தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக முன்னைய ஆண்டில் ரூபா 50 மில்லியன் தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் எந்தவொரு பணமும் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அதற்காக ரூபா 139 மில்லியன் நிதியேற்பாடு மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதில் ரூபா 78.23 மில்லியன் தொகை அல்லது 56 சதவீதம் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றில் நிர்மாணங்களின் பௌதீக ரீதியான செயன்முன்னேற்றம் 10 சதவீதம் மாத்திரமேயாகும்.

(ஆ) துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரியின் இயந்திரவியல் பொறியியலாளர் கற்கைநெறிக்காக முன்னைய ஆண்டில் ரூபா 22,876,575 இற்கு கொள்வனவு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்ட CNC Milling இயந்திரத்திற்காக 2017 மார்ச் 16 இல் ரூபா 17,903,407 தொகையும் 2018 சனவரி 05 இல் ரூபா 4,973,168 கூட்டுமொத்தமான மிகுதி தொகையும் பெறுமதிசேர் வரியும் வழங்குநரிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆம் ஆண்டு தொடர்பாக அனைத்து தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரிகளிற்கும் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான திட்டமிடல் செயன்முறையின் போது நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் மற்றும் கொள்வனவுகளிற்காக நியமனம் செய்யப்பட்ட குழு உறுப்பினர்களிடமிருந்தான வேண்டுதல்கள் எதுவும் காணப்படாததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் இரண்டு உறுப்பினர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் அவை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.4(இ) வழிகாட்டலின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஆகக் குறைந்தது ஒரு உறுப்பினராக வரிசை அமைச்சு அல்லது பெறுகை விடயப் பரப்பு தொடர்பான அறிவைக் கொண்ட வெளிநபரொருவர் காணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான நபரொருவர் இவ் மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுமதி சேர் வரியுடன் (வற்) ரூபா 22.87 மில்லியன் பெறுமதியான இவ் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் முறையான திட்டமின்றி கொள்வனவு செய்யப்பட்ட அவ் இயந்திரத்தை செயற்படுத்துவதற்குப் பொருத்தமான மதியுரையாளர் காணப்படாததன் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2018 செப்தெம்பர் 15 வரையிலும் இது விளைவற்றிருந்தது.

(iii) ஆண்டொன்றில் 12 மணித்தியாலங்கள் இயந்திர அறிமுக விரிவுரைகளிற்காக மாத்திரம் இவ் இயந்திரம் பயன்படுத்தப்படுகின்றதால் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக ரூபா 22.87 மில்லியன் தொகை செலவிடுவதற்குப் பதிலாக அச் செயற்பாட்டை பதுளை மற்றும் கண்டி தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து மேவுகை செய்வதற்கு முடிந்திருந்ததென உரிய அலுவலர்களுடனான கலந்துரையாடல்களின் போது இது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) இவ் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக 2016 ஏப்ரல் 04 இல் பிரசுரிக்கப்பட்ட புதினப் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் 2016 ஏப்ரல் 20 இல் நடாத்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட முன் பெறுகைக் கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) இதற்காக கூறுவிலை கோரும் போது இரண்டு நிறுவனங்களிடமிருந்து மாத்திரமே கூறுவிலைகள் பெறப்பட்டிருந்ததுடன் ஆகக் குறைந்த உத்தரவாதக் காலப்பகுதி 3 ஆண்டுகளிற்குப் பதிலாக ஒரு ஆண்டு ஆகக் காணப்பட்டதன் காரணமாக கூறுவிலைகளை ஒப்பீடு செய்யாமலும் விலைமனுதாரர்களிடமிருந்து எழுத்துமூல விளக்கங்களை பெற்றுக்கொள்ளாமலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் ஒரு விலைமனுதாரர் நிராகரிக்கப்பட்டு மற்றைய விலைமனுதாரரிடமிருந்து அவ் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அத் தீர்மானத்திற்கு பெறுகைக் குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதற்கிணங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (அ) வழிகாட்டலின் பிரகாரம் உயர் தரத்துடன் ஆகக் குறைந்த கிரயத்தை ஏற்படுத்துகின்ற விளைவொன்றாக ஆகக் கூடிய பொருளாதார நன்மைகளை வழங்குதல் போன்ற நோக்கங்கள் அடைந்துகொள்ளப்பட்டதென கணக்காய்வின் போது திருப்திப்பட முடியாதிருந்தது.

(vi) ஒப்பந்த உடன்படிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் 45 நாட்களினுள் இயந்திரம் கையளிக்கப்பட வேண்டும். 2016 யூன் 28 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந் நாளிலிருந்து 239 நாட்கள் தாமதித்து 2017 பெப்ரவரி 22 இல் ஒப்பந்ததாரரால் இயந்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் இயந்திரத்தை நிறுவுவதற்குத் தேவையான இடமொன்றை தயாரிப்பதற்காகவும் அவ் இடத்திற்கு காஸ் உபகரணம் மற்றும் மின்சாரத்தை வழங்குவதற்காகவும் மேலும் 242 நாட்கள் கடந்திருந்தன. அதற்கிணங்க இயந்திரம் 481 நாட்கள் தாமதித்து 2017 ஒக்தோபர் 20 இல் நிறுவப்பட்டிருந்தது. நீண்ட காலப்பகுதியொன்றின் பின்னர் இயந்திரம் நிறுவப்பட்டிருந்த போதிலும் தாமதித்த காலப்பகுதிக்காக ஒப்பந்ததாரரிடமிருந்து தாமதக் கட்டணங்களை பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vii) கேள்வி நிபந்தனை 16.2 (அ) இன் பிரகாரம் இயந்திரம் குறிப்புரைகளிற்கு இணங்குகின்றது எனவும், இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது எனவும் மற்றும் இயந்திரம் நல்ல நிலையில் செயற்படுகின்றது எனவும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுதிப்படுத்தல்களுடன் மாத்திரமே உரிய ஒப்பந்தக் கம்பனிக்கு இயந்திரப் பெறுமதியில் 90 சதவீதம் செலுத்தப்பட முடிந்திருந்த போதிலும் அதற்கு முரணாக இயந்திரப் பெறுமதியில் 90 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இயந்திரத்தின் செயலாற்றல் தொடர்பாக எந்தவொரு உறுதிப்படுத்தலும் இன்றி 2018 சனவரி 05 இல் வழங்குநருக்கு ரூபா 1,989,267 தொகையான நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது.

(viii) இயந்திரம் நிறுவப்பட்ட பின்னர் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 30 வரையிலும் 313 நாட்கள் கடந்திருந்த போதிலும் 30 மணித்தியால காலப்பகுதிக்கு இயந்திரம் தொடர்பாக அறிவூட்டும் அடிப்படைப் பயிற்சிக்காக மாத்திரம் இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ix) 2018 சனவரி 05 இல் உள்ளவாறு பெறுமதி சேர் வரியாக இருந்த ரூபா 2,983,901 தொகை இவ் இயந்திரத்திற்காக உரிய கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2018 செப்தெம்பர் 18 வரையிலும் உள்நாட்டு

இறைவரித் திணைக்களத்திற்கு அத் தொகையை வழங்குநர் அனுப்பியிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(x) அவ் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக 2016 ஆம் ஆண்டில் நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரியால் வேண்டப்பட்ட ரூபா 7,363,500 மதிப்பிடப்பட்ட பெறுமதியையுடைய உபகரணம் 2018 ஆகஸ்ட் 30 வரையிலும் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருக்காததுடன் அத்தகைய உபகரணம் காணப்படாததன் காரணமாக மோட்டார் இயந்திரவியல் கற்கைநெறியின் செய்முறைப் பயிற்சிகளிற்காக கண்டி தொழிநுட்பக் கல்லூரிக்கு மாணவர்களை கூட்டிச்செல்ல வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(xi) இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் இவ் இயந்திரத்தை நிறுவுவதற்காக முறையான இடமொன்று தயாரிக்கப்படாததன் காரணமாக 2018 செப்தெம்பர் 03 வரையிலும் அலுமினியம் ஒட்டுதல் தொடர்பான கற்கைநெறியை தொடருகின்ற மாணவர்களிற்கு இன்னொரு கட்டிடத்தில் கற்கைநெறி நடாத்தப்பட வேண்டியிருந்தது. மேலும் அவற்றில் பயன்படுத்தப்பட்ட உபகரணம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மாணவர்களின் செய்முறைப் பயிற்சிகளும் தடைப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் 2017 மார்ச் 22 இல் இயந்திரவியல் பொறியியலாளரிற்கு அதிபர் அறிவித்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 செப்தெம்பர் 03 இல் உள்ளவாறு 530 நாட்கள் கடந்திருந்த போதிலும் அதற்காக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xii) இந்த இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு பயிற்சி கற்கைநெறிகள் காணப்படாத போதிலும் இயந்திரத்தை வைத்திருக்கும் போது இயந்திரம் செயற்படாதிருப்பதற்கு இடமளிப்பதன் காரணமாக இது ஆகக் குறைந்தது நாளொன்றிற்கு 3 அல்லது 4 மணித்தியாலங்கள் செயற்படுத்தப்படுகின்றதால் திணைக்கத்திற்கு மேலதிக மின்சார கட்டணம் செலவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் இவ் இயந்திரம் விளைவற்றிருந்ததன் காரணமாக இயந்திரத்தின் உத்தரவாதக் காலப்பகுதியும் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு

2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.2.7 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வுகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் 2018 யூன் 30 இற்கு முன்னர் பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் தலைமை அலுவலக களஞ்சியங்கள் மற்றும் 17 ஏனைய பிரிவுகள் மற்றும் 39 தொழில்நுட்ப/ தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலுள்ள பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாக அவ்வாறு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் சொத்துக்கள் விளைவற்றிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| நிறுவனம் | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்றிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி | மோட்டார் வாகனங்களை உயர்த்தும் இயந்திரம் | 01 | 10 ஆண்டுகள் |
| கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி | CNC Milling இயந்திரம் | 01 | 08 ஆண்டுகள் |
| பதுளை தொழில்நுட்பக் கல்லூரி | CNC Lathe இயந்திரம் | 01 | குறிப்பிடப்படவில்லை |
| | CNC turning இயந்திரம் | 01 | குறிப்பிடப்படவில்லை |
| தம்புள்ள தொழில்நுட்பக் கல்லூரி | வாயு மற்றும் நீராவி ஒட்டுதல் | | குறிப்பிடப்படவில்லை |
| | இயந்திர மர வேலைகள் மற்றும் | | குறிப்பிடப்படவில்லை |
| | தொழிற்சாலைகளில் உள்ள மேசன்மார்களின் உபகரணங்கள் | | குறிப்பிடப்படவில்லை |
| மொனராகலை தொழில்நுட்பக் கல்லூரி | கணனிகள் | 21 | குறிப்பிடப்படவில்லை |
| | நூலகப் புத்தகங்கள் | 471 | குறிப்பிடப்படவில்லை |
| அனுராதபுர தொழில்நுட்பவியல் கல்லூரி | தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரம் | 03 | 03 ஆண்டுகள் |

**(இ) பாதுகாப்பற்ற ஆதனங்கள்**

வீரவில தொழில்நுட்பக் கல்லூரியின் வளாகத்தை சுற்றி முறையான பாதுகாப்பு வேலி காணப்படாததன் காரணமாக கல்லூரி வளாகங்களிலுள்ள ஆதனங்கள் குறித்த சுற்றாடலில் பாதுகாப்பற்று இ-ருந்தன என உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**(ஈ) வெளித் தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பின்வரும் காணிகள் திணைக்களத்தால் முறையற்ற வகையில் வெளித்தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்களை விடுவித்த திகதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| அளவு | சொத்துக்கள் அமைந்திருக்கும் இடம் | சொத்துக்கள் வழங்கப்பட்டிருந்த நிறுவனம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| ➢ 10 ஏக்கர்கள் | குளியாப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரி – வெவேதென்ன காணி | பல்கலைக்கழக கல்லூரி | தேவையான அளவீட்டு நடவடிக்கைகள் மற்றும் திட்ட வரைபடம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ➢ 08 | - மேற்படி - | இளைஞர் | முறையான கையளிப்பு |

| | | | |
|---|---|---|---|
| ஏக்கர்கள் | | படையணி | இடம்பெற்றிருக்கவில்லை. |
| ➢ 110 பேர்ச்கள் | பெலிஅத்த தொழில்நுட்ப கல்லூரியின் நீச்சல் தடாகம் | விளையாட்டு அமைச்சு | விளையட்டு அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவரால் கையேற்கப்பட்டிருந்த போதிலும் முறையான கடிதமொன்று தொழில்நுட்ப கல்லூரிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| ➢ 9.5 பேர்ச்கள் | கேகாலை தொழில்நுட்ப கல்லூரி | வெளிநபர் ஒருவர் | 1997 ஆம் ஆண்டின் போது 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் குத்தகை ஒப்பந்தம் திணைக்களத்திடம் காணப்படவில்லை. |
| ➢ 6.8 பேர்ச்கள் | - மேற்படி - | வெளிநபர் ஒருவர் | வெளிநபர் ஒருவர் அத்துமீறி குடியிருந்தார். அது தொடர்பாக 2015 திசெம்பர் 04 ஆம் திகதி கல்லூரி அதிபர் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும் திணைக்களத்தினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ➢ 05 ஏக்கர்கள் | - மேற்படி - | இளைஞர் படையணி பயிற்சி நிலையம் | முறையான கையளிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. |
| ➢ 1.5 ஏக்கர்கள் | - மேற்படி - | திறந்த பல்கலைக்கழகம் | சட்ட ரீதியாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ➢ 3 ரூட் 3.9 பேர்ச்கள் | இரத்மலான தொழில்நுட்பக் கல்லூரி | பல்கலைக்கழக கல்லூரி | முறையான கையளிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. |

(ii) கொரியன் உதவிகளின் கீழ் திணைக்களத்திற்கு 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ஜீப் ஒன்று திணைக்களத்தின் நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தப்படாமல் உரிய வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

**(உ) முறையற்றவாறு கையளிக்கப்பட்ட சொத்துக்கள்**

வரிசை அமைச்சின் கீழ் செயற்படுகின்ற தொழில்நுட்ப தொழிற்பயிற்சி நிறுவகத்தின் (ரீஜரீபி) கட்டிடம் மற்றும் அதற்குச் சொந்தமான சொத்துக்கள் 2016 பெப்ரவரி 02 தொடக்கம் அவ் அமைச்சின் செயலாளரால் இத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவையின் முறையான அங்கீகாரத்துடன் அதனை கையளிக்காமல் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஊ) வாகனப் பயன்பாடு**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குச் சொந்தமான 69 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவற்றிற்குத் தேவையான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்க்காக ரூபா 19.74 மில்லியன் தொகையும் வாகனங்களின் சேவிஸ், திருத்தம் மற்றும் வாகனக் காப்புறுதிகள் என்பவற்றிற்காக ரூபா 6.87 மில்லியன் தொகையும் ஆக

ரூபா 26.61 மில்லியன் கூட்டுமொத்தத் தொகை செலவிடப்பட்டிருந்தது. இவ் வாகனங்களில் 17 வாகனங்களை பரீட்சித்த போது ஆண்டின் போது 128,631 கிலோமீற்றர் ஓடியிருந்தது. சாரதிகளின் சம்பளங்கள் மற்றும் படிகள் தவிர கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 51 தொகை செலவிடப்பட்டிருந்தது. மிகுதியாகவுள்ள வாகனங்கள் தொடர்பாக முறையாக ஆவணங்கள் பேணப்படாததன் காரணமாக அவ் வாகனங்கள் ஆண்டின் போது ஓடப்பட்ட கிலோமீற்றர்களின் எண்ணிக்கை, வாகனங்களிற்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்கள் தொடர்பான செலவினம் போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்படி வாகனங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெலிஅத்த தொழில்நுட்பக் கல்லூரிக்கு இணைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று 2011 மார்ச் 18 ஆம் திகதி அதன் என்ஜின் செயற்படாமல் போனமை மற்றும் 2011 யூன் 05 ஆம் திகதி அக் கல்லூரி வளவில் வாகனம் நிறுத்தப்பட்டிருந்த போது பின்பக்க கண்ணாடி உடைந்தமை போன்ற இரண்டு சம்பவங்கள் காரணமாக வாகனத்தை உரிய நிலைக்கு கொண்டு வருவதற்காக ரூபா 1.97 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 2014 யூன் 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நட்டத்தின் 40 சதவீதம் சாரதியிடமிருந்து அறவீடு செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகை 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரியின் மோட்டார் கோச் வகையான வாகனம் ஒன்றினை 2012 செப்தெம்பர் 27 ஆந் திகதி பணிப்பாளரினால் ஓட்டிச்சென்ற சந்தர்ப்பத்தின் போது விபத்துக்கு உட்பட்டிருந்ததுடன் அவ் வகையான வாகனம் (மோட்டார் கோச்) ஓட்டுவதற்கான உரிய சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்று அவரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ் வாகனத்தை திருத்தியமைப்பதற்காக ரூபா 1.03 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 2013 ஜனவரி 11 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் வாகனத்திற்கான சாரதியொருவரை நியமிக்காமை மற்றும் முழுப்பொறுப்புடனான காப்புறுதி செய்யப்படாததன் காரணமாக நட்டத்தின் 50 சதவீதம் வாகனத்தை ஓட்டிச் சென்ற பணிப்பாளரிடம் அறவீடு செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கல்லூரியின் பணிப்பாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நட்டம் 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2017 யூலை 23 ஆம் திகதி தொடக்கம் அப் பணிப்பாளர் ஓய்வுபெற்றுச் சென்றிருந்ததுடன் அவ் வாகனத்தின் திருத்தச் செலவினம் மற்றும் 25 சதவீத தண்டப்பணம் உள்ளடங்கலாக ரூபா 1,286,539 தொகை அவரின் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 செப்தெம்பர் 15 வரையிலும் உரிய நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 திசெம்பர் 26 ஆம் திகதி ரூபா 462,450 தொகை செலவிடப்பட்டு வாகனம் ஒன்று திருத்தம் செய்யப்பட்ட போதிலும் அத் திருத்தம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் வாகனம் 1000 கிலோமீற்றர்களை விடக் குறைவாக ஓடப்பட்டிருந்தது. அவ் வாகனத்தின் எஞ்சின் 2012 மார்ச் மாதத்திலிருந்து செயற்பாட்டை நிறுத்தி 06 ஆண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதி கடந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் விளைவற்றிருந்தது. இத் திருத்தம் முறையாக மேற்கொள்ளப்பட்டிருந்ததென தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை. அதே போல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு உரிய உத்தரவாதக் காலப்பகுதியினுள் பழுதடைந்திருந்ததால் திருத்தத்தை மேற்கொண்டிருந்த நிறுவனம் அது தொடர்பாக தலையிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ரூபா 462,450 தொகையான திருத்தக் கிரயம் மற்றும் ரூபா 10,000 தொகையான எஞ்சின் பரீட்சிப்புக் கிரயம் என்பன

அரசாங்கத்திற்கு நட்டங்களாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் திணைக்களம் இது தொடர்பாக முறையான புலனாய்வொன்றை மேற்கொண்டிருக்கவில்லை.

**(எ) அரச இல்லங்களின் கட்டுப்பாடு**

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 260 அரச இல்லங்கள் திணைக்களத்திற்குச் சொந்தமாக காணப்பட்டதுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவின் பிரகாரம் இல்லங்களிற்கான குத்தகைக் காலம் 5 வருடங்களாக உள்ளதுடன் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் குத்தகைக் காலத்தை விஞ்சி குடியிருக்கும் காலப்பகுதிக்காக காத்திருத்தல் பட்டியலில் விண்ணப்பதாரிகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் தண்டப் பணம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் அநுராதபுரம், நுவரெலியா, கண்டி, தெஹிஅத்த கண்டிய, காலி மற்றும் கேகாலை ஆகிய கல்லூரிகளுக்குரிய அரச இல்லங்களிலுள்ள 16 உத்தியோகத்தர்கள் தெடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்திற்குச் சொந்தமான வீடுகளின் எண்ணிக்கை, அமைந்துள்ள இடம், வீடுகளின் வகை, வதியும் உத்தியோகத்தர்களின் விபரம் மற்றும் செலுத்தும் வாடகை பற்றிய விபரங்கள் அடங்கிய பதிவேடொன்று மற்றும் காத்திருத்தல் பட்டியலொன்று தலைமை அலுவலகத்தினால் பேணப்படாமையினால் உத்தியோகபூர்வ இல்லங்களின் கட்டுப்பாடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(iii) கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான இல்லங்களில் 126 உரியவாறு பராமரிக்கப்படாததன் காரணமாக திருத்த வேண்டிய மற்றும் பாழடைந்த நிலைமையில் காணப்பட்டதுடன் மேலும் அவ் இல்லங்களை திருத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

**வருடாந்த பாதீட்டு எல்லைகளை விஞ்சி பொறுப்புக்களிற்கான கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த கடப்பாடுகளும் பொறுப்புக்களும் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணங்காமல் 02 செலவின விடயங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு ரூபா 85 மில்லியனாக காணப்பட்ட போதிலும் அதற்காக ரூபா 148.8 மில்லியன் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 03 செலவின விடயங்களிற்குரிய ஆகக்கூடிய பொறுப்பு எல்லை ரூபா 32.89 மில்லியனாக இருந்த போதிலும் அவ் ஆகக் கூடிய எல்லையை விஞ்சி ரூபா 443.58 மில்லியன் வரை பொறுப்புக்களிற்கான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 2.7 நட்டங்களும் சேதங்களும்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டங்கள் மற்றும் சேதங்களாக ரூபா 5,173,327 தொகை அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 3,963,215 தொகையான நட்டங்களும் சேதங்களும் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருந்ததுடன் அப் பெறுமதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 பொதுமக்களிற்கான சேவைகளை நிறைவேற்றுதல்**

தகவலை அறிந்துகொள்ளும் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் முறையாக தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டிய போதிலும் அத்தகைய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை மற்றும் தகவல்கள் பொதுமக்களிற்கு வழங்கப்பட்டிருந்தமைக்கான சான்றெதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள், பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 1315.4 | 1170.3 | 145.0 | 11 |
| | மூலதனம் | 310.6 | 105.1 | 205.4 | 66 |
| | மொத்தம் | **1626.0** | **1275.5** | **350.4** | **22** |
| 2014 | மீண்டெழுபவை | 1319.4 | 1313.7 | 5.6 | 0.4 |
| | மூலதனம் | 224.1 | 187.2 | 36.8 | 16 |
| | மொத்தம் | **1543.5** | **1500.9** | **42.4** | **2.7** |
| 2015 | மீண்டெழுபவை | 1628.3 | 1597.8 | 30.5 | 1.9 |
| | மூலதனம் | 335.9 | 321.3 | 14.5 | 4 |
| | மொத்தம் | **1964.2** | **1919.1** | **45.0** | **2** |
| 2016 | மீண்டெழுபவை | 1999.1 | 1941.6 | 57.5 | 2.9 |
| | மூலதனம் | 350.0 | 190.6 | 159.3 | 45.5 |
| | மொத்தம் | **2349.1** | **2132.2** | **216.8** | **9** |
| 2017 | மீண்டெழுபவை | 7.1883 | 1799.9 | 83.9 | 4.5 |
| | மூலதனம் | 378.2 | 275.8 | 102.4 | 27 |
| | மொத்தம் | **2261.9** | **2075.7** | **186.3** | **8** |

2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் அண்டு வரை மொத்த தேறிய நிதி ஏற்பாடு படிமுறையாக அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டை விட ரூபா 87.1 மில்லியனால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் மூலதனச் செலவினங்களிற்கான தேறிய நிதி ஏற்பாடு ஏனைய முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது உயர் பெறுமதியை பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முலதன செலவினத்தில் ரூபா 85.2 மில்லியன் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது அபிவிருத்தி நடவடிக்கைகளில் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டிற்குரிய செயற்பாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,261.9 மில்லியன் தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 2,075.7 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 186.3 மில்லியன் தொகை பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செலவினத் தலைப்பின் மொத்த சேமிப்புக்கள் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 8 சதவீதமாக இருந்த போதிலும் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட மூலதன நிதி ஏற்பாடுகளில் முறையே 57 சதவீதம் மற்றும் 25 சதவீதமான சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. கட்டிட நிர்மாணம் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதமை இச் சேமிப்புக்களிற்குப் பிரதான காரணங்களாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### 2.10.1 பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 21501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 60.00 | 60.00 | 49.00 | 49.00 | 200.00 | 114.00 |

### நிலுவையாக இருந்த கடன் மீதிகள் அறவீடு செய்யப்படாமை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை (இடமாற்றம் பெற்றுச் உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர) ரூபா 3,218,939 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டு தொடக்கம் 22 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்து வந்த போதிலும் அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

## 2.11 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 03 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 54.29 மில்லியனாக இருந்தது. அதில் 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 9.85 மில்லியன் கூட்டுத்தொகையான 50 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்

திணைக்களத்தின் செயற்திட்டங்களால் பேணப்பட்டிருந்த 02 நடைமுறைக் கணக்குகள் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் செயற்பாடற்றிருந்ததுடன் அக் கணக்குகளின் மீதி ரூபா 63,150 ஆக காணப்பட்டது. இச் செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளிலுள்ள காசு மீதியை அரச வருமானத்திற்கு செலவு வைத்து அக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சீராக்கம் செய்யப்பட வேண்டிய மீதிகள்**

திணைக்களத்தில் 2017 ஆம் ஆண்டில் செயற்பட்டிருந்த 40 வங்கிக் கணக்குகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்களின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான 10 வங்கிக் கணக்குகளிலுள்ள வங்கிக் கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 30,000 ஆக ஒதுக்கீட்டுக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு (iv) இல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ் வங்கிக் கணக்குகளில் 2018 சனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 7,749,547 ஆக காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு தலைமை அலுவலகத்தில் இனங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 229,943 ஆக இருந்ததுடன் அம்பாறை, குளியாப்பிட்டிய கல்லூரிகளில் இனங்காணப்படாத பெறுவனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 27,030 ஆக காணப்பட்டது.

**2.13 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் உரிய பிரமாணங்களின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| பெறுகைக் குழுக்களின் கூட்டக் குறிப்புக்கள் | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.3 (அ) வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரிகளின் கற்கைநெறிக் கட்டணங்களிற்கான காசுப் பெறுவனவுப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 165(4) | பேணப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

**2.14 இணங்காமைகள்**

**2.14.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | |
| XIV ஆம் அத்தியாயத்தின் 4.1 பிரிவு | இணைந்த படிகளைச் செலுத்துவதற்கு ஆகக் குறைந்தது கடமை நிலையத்திலிருந்து 7 மைல்களிற்கு அதிகமான தூரம் பிரயாணம் செய்திருக்க வேண்டிய போதிலும் அதனை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் சில பிரயாணக் கோரிக்கை உறுதிச்சீட்டுக்களில் பிரயாணம் செய்த தூரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | |
| நிதிப் பிரமாணம் 139(4) | ஒவ்வொரு கொடுப்பனவையும் மேற்கொள்ளும் போது பற்றுச்சீட்டு பெறப்பட வேண்டிய போதிலும் 06 கல்லூரிகளில் ரூபா 926,416 பெறுமதியான கொடுப்பனவுகளிற்காக 77 சந்தர்ப்பங்களின் போது பற்றுச்சீட்டுக்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |

**2.15 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**2.15.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக (வெளிவாரி மதியுரையாளர்களிற்கான கொடுப்பனவுகள் தவிர) ரூபா 500.3 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க தனிநபர் ஒருவரிற்கான செலவினம் ரூபா 521,592 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 1,313 | 643 | 670 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 144 | 35 | 109 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1,242 | 834 | 408 | 12 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 1,170 | 907 | 263 | 24 |
| | **மொத்தம்** | **3,869** | **2,419** | **1,450** | **38** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்படி தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை தொழில்நுட்ப கல்வி சேவையின் 05 பணிப்பாளர்களில் 04 பேரும் 09 தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் 08 பணிப்பாளர்கள் மற்றும் 07 மேலதிக பணிப்பாளர்களிற்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 30 அதிபர்களில் 25 பேருக்கும் 30 உதவி அதிபர் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. தொழிநுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரிகளில் 274 விரிவுரையாளர்களில் 218 பேரும் 897 மதியுரையாளர்களில் 334 பேரும் 22 தொழில்துறை மதியுரையாளர்களும் 39 பதிவாளர்களில் 20 பேரும் அவ்வெற்றிடங்களுக்கு இடையே காணப்பட்டனர். இதன் காரணமாக தொழிநுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்வி நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளிற்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மிகை பதவியணியிரின் எண்ணிக்கை 38 ஆக இருந்ததுடன் அதில் 17 திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அலுவலக உதவியாளர் சேவை, பாதுகாப்பாளர், கணனி செயற்படுத்துநர் மற்றும் அலுவலக கண்காணிப்பாளர் போன்ற பதவிகளிற்கு நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

(இ) நிரந்தரப் பதவியணியினரில் உள்ள ஆய்வுகூடப் பதவியணியினர் மற்றும் மதியுரையாளர்களின் வெற்றிடங்களின் காரணமாக தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் வெளிவாரி மதியுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களிற்காக மீளாய்வாண்டில் ரூபா 207,281,403 தொகை வெளிவாரி மதியுரை படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. அவ் விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் கல்லூரி அடிப்படையில் இடம்பெறுவதுடன் அவர்கள் விரிவுரைகளை நடாத்தும் போது காணப்படும் வினைத்திறமை மற்றும் ஆக்கவளம் தொடர்பாக மதிப்பீடொன்று தலைமை அலுவலகத்தின் மூலம் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் கல்லூரிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த வெளிவாரி விரிவுரையாளர்களின் தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் பிரதிகள் உண்மையானதென உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) தாபனவிதிக் கோவையின் மூன்றாம் அத்தியாயத்தின் 3.8.2 ஆம் பிரிவு மற்றும் திணைக்களத்தின் இடமாற்ற கொள்கையின் பிரகாரம் ஒவ்வொரு தரத்திலுள்ள சேவையிடங்களில் சேவை செய்ய வேண்டிய உச்ச காலப் பகுதியின் பிரகாரம் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். எனினும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 10 ஆண்டுகளுக்கு மேலான சேவைக்காலத்தை விஞ்சிய 19 கல்விசார் பதவியணியினர் மற்றும் 59 கல்விசாரா பதவியணியினர் காணப்பட்டனர்.